பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.85 நாள் : 28.06.2019

**2018–19ம் கல்வியாண்டில் அறிவியல் போட்டிகளில் வெற்றிபெற்று சிங்கப்பூருக்கு கல்விச்சுற்றுலா சென்று வந்த சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களை சந்தித்து பாராட்டுக்களை பெற்றனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மற்றும் சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பும் இணைந்து 2018–19ம் கல்வியாண்டில் நடத்திய அறிவியல் போட்டிகளில் வெற்றிபெற்று சிங்கப்பூருக்கு கல்விச் சுற்றுலா சென்று வந்த சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களை இன்று (28.06.2019) நேரில் சந்தித்து பாராட்டுக்களை பெற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையும், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பும் இணைந்து “Wings to Fly” என்ற திட்டத்தின் மூலம் மாணவ/மாணவியர்களின் அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளாக பல வகையான அறிவியல் சார்ந்த போட்டிகள் நடத்தி மாணவ/மாணவியர்களை அயல்நாடுகளுக்கு கல்விச் சுற்றுலாவாக அழைத்துச் சென்று வருகின்றனர்.

கடந்த 2015–16ம் கல்வியாண்டில் 7 மாணவ, மாணவியர்கள் மலேசியாவிற்கும், 2016–17ம் கல்வியாண்டில் 8 மாணவ, மாணவியர்கள் ஜெர்மன் நாட்டிற்கும், 2017–18ம் கல்வியாண்டில் 8 மாணவ, மாணவியர்கள் அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர்.

அதேபோல் 2018–19ம் கல்வியாண்டிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மூன்று சுற்றுகளாக அறிவியல் போட்டிகள் நடத்தப்பட்டது. அப்போட்டியில் முதல் சுற்றில் 280 மாணவ/மாணவியர்களும், இரண்டாம் சுற்றில் 32 மாணவ/மாணவியர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவியர்களும் கல்விச் சுற்றுலாவாக சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்ல அறிவிக்கப்பட்டது. இறுதிச்

சுற்றில் வெற்றி பெற்ற 26 மாணவ/மாணவியர்கள் ஜுன் மாதம் 16–ம் தேதி முதல் 20ம் தேதி வரை நான்கு நாட்களுக்கு சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த மாணவ, மாணவியர்கள் சிங்கப்பூரில் National University of Singapore, Garden by the Bay, Spore Zoo, Jurong Bird Park, Sentosa, Science Centre ஆகிய இடங்களைப் பார்வையிட்டு ஆர்வமுடன் கண்டுகளித்தனர். இந்த கல்விச்சுற்றுலா சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்களின் அறிவியல் திறன், கற்பனைத் திறன் மற்றும் எதிர்கால திட்டமிடல் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள இந்த வாய்ப்பு பெரிதும் உதவியாக இருந்தது.

கல்விச்சுற்றுலாவாக சிங்கப்பூருக்கு சென்று வந்த 26 மாணவ, மாணவியர்கள் இன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து புத்தகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் (பொ) திரு.பாரதிதாசன் அவர்கள், உதவி கல்வி அலுவலர்கள், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் நிர்வாகிகள், தலைமையாசிரியை மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**